# தேவகோட்டை நகராட்சி.

## அவசரக்கூட்டம்.

தேவகோட்டை நகராட்சியில் நகர்மன்ற அவசரக்கூட்டம் 03.04.2023–ம் தேதி திங்கட்கிழமை காலை 12.00 மணிக்கு அவசரக்கூட்டம் நடைபெறவுள்ளது. அவ்வமயம் கீழ்க்கண்ட பொருட்கள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. தாங்கள் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளவேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

K. Sundaralingam

நகர்மன்ற தலைவர்,
தேவகோட்டை நகர்மன்றம்.

3.4.23.

**பொருள் – 258**

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட கீழ்காணும் பகுதிகளில் அப்பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்து நலன் கருதி கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண்–3, அண்ணாசாலை மற்றும் காமாட்சி அம்மன் நகர் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலங்கள் கட்டுதல் பணி. | 9.90 |
| 2. | வார்டு எண்–12, சுப்பிரமணியபுரம் தெருவில் பேவர்பிளாக் கல்தளம் அமைத்தல் பணி. | 9.50 |
| 3. | வார்டு எண்–13, சரஸ்வதி வாசக சாலை 8வது மற்றும் குறுக்குத் தெருவில் பேவர்பிளாக் கல்தளம் அமைத்தல் பணி. | 9.00 |
| 4. | வார்டு எண்–14, கருதாஊரணி பிள்ளையார் கோவில் சந்து பேவர்பிளாக் கல்தளம் அமைத்தல் பணி. | 8.50 |
| 5. | வார்டு எண்–15, கருப்பண்ணசாமி முளைமேடை குறுக்குத் தெருவில் பேவர்பிளாக் கல்தளம் அமைத்தல் பணி. | 9.00 |
| 6. | வார்டு எண்–16, பொதிநாகப்பன் சந்து மற்றும் காளி அழகப்பன் தெருக்களில் பேவர்பிளாக் கல்தளம் அமைத்தல் பணி. | 9.50 |
| 7. | வார்டு எண்–17, க.க.மு தெருவில் ஆழ்துளைக்குழாய் கிணறு அமைத்து சின்டெக்ஸ் மூலம் குடிநீர் வழங்குதல் பணி மற்றும் பேவர்பிளாக் கல்தளம் அமைத்தல் பணி. | 9.90 |
| 8. | வார்டு எண்–18, சிதம்பரநாதபுரம் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் பேவர்பிளாக் கல்தளம் அமைத்தல் பணி. | 9.00 |
| 9. | வார்டு எண்–20, வெள்ளையன் ஊரணி குளக்கால் பகுதியில் பேவர்பிளாக் கல்தளம் அமைத்தல் பணி. | 9.90 |
| 10. | வார்டு எண்–21, பழனியப்பன் சந்தில் பேவர்பிளாக் கல்தளம் அமைத்தல் பணி. | 9.00 |
| 11. | வார்டு எண்–22, கட்டவெள்ளையன் தெருவில் பேவர்பிளாக் கல்தளம் அமைத்தல் பணி. | 9.00 |
| 12. | வார்டு எண்–24, கொல்லங்குடியார் மேலவீதி மற்றும் கைலாசநாதபுரம் பகுதியில் பேவர்பிளாக் கல்தளம் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணி. | 9.90 |

| | | |
|---|---|---|
| 13. | வார்டு எண்–27, அருணாச்சல பொய்கை கிழக்கு குறுக்குத் தெருவில் பேவர்பிளாக் கல்தளம் அமைத்தல் பணி. | 9.00 |
| 14. | GH - விவசாய பண்ணை சாலை பேவர்பிளாக் தளம் அமைத்தல் பணி. | 9.90 |

மேற்காணும் பணிகளுக்கு மேற்கண்டவாறு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு–

அ)மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)மேற்காணும் பணிக்கான செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம்.

––

## பொருள் – 259

இந்நகராட்சிக்கு வார்டு எண். D, பிளாக் எண்.21, நகரளவு எண்கள்.9,10,11,12–ல் உள்ள பரப்பளவில் 7693.50 சதுரமீட்டர் கொண்ட இடத்தை 37 குடியிருப்பு மனை பிரிவுகளாக பிரித்து நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சிவகங்கை அவர்களால் தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதில் சாலைகள் அமைக்க 2451 சதுரமீட்டர் இடமும் மற்றும் உள்ளாட்சி உபயோகத்திற்கு 36.91 சதுரமீட்டர் இடமும் இந்நகராட்சிக்கு பத்திர பதிவுத்துறை மூலமாக 26.12.2022ம் தேதிய பதிவு ஆவண எண். 5948/2022–ல் தானமாக பதிந்து தேவகோட்டை நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆவணத்தை மன்றத்தின் பார்வைக்கு பதிவிற்கும் வைக்க வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு–

அ)மன்றம்அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 09.03.2023–ல் முன் அனுமதி பெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.0416/2023/எப்1,

––

## பொருள் – 260

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.26, தேனம்மை ஊரணி தெற்கு குறுக்கு சந்து மண் சாலையாக உள்ளது. பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் மிகவும் மோசமாக உள்ளது. மேலும் மழைக்காலங்களில் தண்ணீர் தேங்கி பொதுமக்களுக்கு நோய் தொற்று ஏற்படும் அபாயம் உள்ளது. மழைநீர் வடிகால் இல்லாத நிலையில் மழைநீர் தேங்கி கொசுக்கள் உற்பத்தியாகி நோய் பரவும் அபாயம் உள்ளது. எனவே மழைநீர் வடிகாலுடன் கூடிய பேவர் ப்ளாக் கல்தளம் அமைக்க உத்தேச செலீனம் ரூ.4,00,000/– இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு –

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் பணிக்கான செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

––

## பொருள் – 261

தேவகோட்டை நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவின் கீழ் பொதுசுகாதாரப் பணிகள் மற்றும் உரக்கிடங்கு பணிகளுக்கு JCB இயந்திரம் மாவட்ட ஆட்சியர் சிவகங்கை அவர்களின்

விலைவிகித்தில் இந்நகர்மன்ற முன் அனுமதி நாள் – 10.11.2022ன்படி இயங்கி வரும் ஸ்ரீ வெற்றி விநாயகர் எர்த் மூவர்ஸ் காரைக்குடி நிறுவனத்திற்கு வழங்கிய பணி உத்தரவு 10.01.2023 உடன் முடிவடைவதால் 11.01.2023 முதல் 28.02.2023 வரை பணி நீட்டிப்பு செய்யவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.3,00,000/– த்திற்கு (ரூபாய் மூன்று லட்சம் மட்டும்) பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு–</u>

அ) மன்றம்அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம்.

––

## <u>பொருள் – 262</u>

தேவகோட்டை நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு இந்நகர் பகுதியில் உள்ள இரண்டு வள மீட்பு மையங்களில் (RRC) மறு சுழற்சிக்கு பயன்படாத நெகிழிக் கழிவுகளை Green Worm Enery என்ற நிறுவனம் மூலம் சிமெண்ட் தொழிற்சாலைக்கு அனுப்பப்பட்டு வந்த நிலையில், தற்போது அந்நிறுவனத்தில் கையாளப்படாததால் இரண்டு வள மீட்பு மையங்களில் தோராயாக 450 டன்களுக்கு மேல் பிளாஸ்டிக் கழிவுகள் உள்ளதாலும், இதுபோக தினசரி சேகரிக்கப்பட்டு வருவதாலும், வரும் கோடைகாலங்களில் எளிதில் தீப்பற்றக்கூடிய வாய்ப்பிருப்பதாலும், இந்நகராட்சியின் சொந்த செலவிலே பிளாஸ்டிக் கழிவுகளை தனியார் நிறுவனங்கள் மூலம் சிமெண்ட் கம்பெனிகளுக்கு கொண்டு செல்வதற்கு இந்நகர் மன்ற முன் அனுமதி நாள் – 15.03.2023–ன்படி விலைப்புள்ளிகள் பெறப்பட்டு மிக குறைந்த விலைப்புள்ளியான DM Solutions - மேலக்கோட்டையூர், சென்னை நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு–</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

––

## <u>பொருள் – 263</u>

பொது சுகாதாரம் பிரிவின் கீழ் இந்நகராட்சி பகுதியில் 27 வார்டு பகுதிகளிலும் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ள 31.12.2022–ந் தேதிய பணி நீட்டிப்பு உத்தரவு விவேகா அறக்கட்டளை நிறுவனத்திற்கு வழங்கி 45 DBC பணியாளர்களை கொண்டு பணி செய்து வரும் நிலையில் மேற்படி நிறுவனத்தின் பணி நீட்டிப்பு வருகின்ற 31.01.2023 அன்று முடிவடையும் நிலையில் உள்ளது.

இந்நிலையில் துப்புரவு ஆய்வாளர் குறிப்பில் இந்நகரில் உள்ள அனைத்து குடியிருப்புகள் வணிக வளாகங்கள், அரசு மற்றும் அரசு சாரா அலுவலகங்கள் நகரின் பிற பகுதிகளில் டெங்கு கொசு ஒழிப்பு பணி மற்றும் கொரோனா வைரஸ் காய்ச்சல் தடுப்பு பணிகள் அனைத்து 45 DBC பணியாளர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. DBC பணியாளர்களை விநியோகம் செய்து வரும் விவேகா அறக்கட்டளை நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி நீட்டிப்பு முடிவடையும் நிலையில் பொது சுகாதாரப் பணி பாதிக்கா வண்ணம் இருக்கவும் பொது சுகாதார அவசரம் அவசியம் கருதி மேற்படி நிறுவனத்தின் மூலம் தற்போதுள்ள நிபந்தனைகளின்படி மேலும் இரண்டு மாத காலம் 01.02.2023 முதல் 31.03.2023 வரை

பணி நீட்டிப்பு செய்யவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.7,00,000/– த்திற்கு (ஏழு இலட்சம் மட்டும்) செலவு மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு–

அ)மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)மேற்காணும் செலவீனத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளமன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1769/2016/எச்1,

––

## பொருள் – 264

தேவகோட்டை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் கீழ் தூய்மை இந்தியா திட்டத்தின் மூலம் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றன. திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் 2018–2019–ன் கீழ் இந்நகராட்சியில் 26 மின்கல வாகனங்கள் வாங்கி அதன் மூலம் இந்நகரில் உள்ள வீடுகளில் தூய்மை பணியாளர்கள் மூலம் குப்பைகளை மக்கும் குப்பையாகவும், மக்காத குப்பையாகவும் தரம் பிரித்து சேகரிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில் இந்நகர்மன்ற தீர்மான எண்.193 நாள் 24.01.2023ன்படி 5 BOV வாகனங்கள் பழுது நீக்கம் செய்யப்பட்டது. இந்நகராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் தொய்வின்றி நடைபெற பழுதடைந்த வாகனங்களில் மேலும் 5 BOV வாகனங்களின் பழுதுகளை சரிசெய்ய இந்நகர்மன்றத்தின் முன் அனுமதி நாள் – 03.03.2023ன்படி இரண்டு விலைப்புள்ளிகள் பெறப்பட்டு அதில் மிக குறைந்த விலைப்புள்ளியான ஈஸ்வரி எண்டர்பிரைசஸ், தேவகோட்டை நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு–

மன்றம்அனுமதிக்கலாம்.

ந.க. எண்.4238/2021/எச்1,

––

## பொருள் – 265

தேவகோட்டை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் கீழ் தூய்மை இந்தியா திட்டத்தின் மூலம் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றன. திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் 2018–2019–ன் கீழ் இந்நகராட்சியில் 26 மின்கல வாகனங்கள் வாங்கி அதன் மூலம் இந்நகரில் உள்ள வீடுகளில் தூய்மை பணியாளர்கள் மூலம் குப்பைகளை மக்கும் குப்பையாகவும், மக்காத குப்பையாகவும் தரம் பிரித்து சேகரிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில் BOV வாகனங்கள் பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் இருந்ததால், இந்நகர்மன்ற தீர்மான எண்.193 நாள்– 24.01.2023ன்படி 5 BOV வாகனங்கள் பழுது நீக்கம் செய்யப்பட்டது. மேலும் 5 BOV வாகனங்களின் பழுதுகளை சரிசெய்ய துப்புரவு ஆய்வரின் குறிப்பின்படி உத்தேச செலவீனம் ரூ.6,50,000/–த்திற்கு செலவீனம் மேற்கொள்ளவும், பொதுமக்களின் பொது சுகாதார நலன் கருதியும் பணிகளின் அவசர அவசியம் கருதியும் பணிமேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு–

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்காணும் செலவினத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

மேற்காணும் பணிக்கு குறைவான விலைப்புள்ளி பெற்று மேல்நடவடிக்கை தொடர மன்றம் அனுமதிக்கலாம். ந.க. எண்.2755/2018/எச்1,

--

## பொருள் – 266

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க. எண்.18313/ஜே2/2022, நாள்–09.03.2023ன்படி, நகராட்சிகளில் மாசற்ற முறையில் 20 ஆண்டுகள் பணிமுடித்த ஒட்டுநர்களுக்கு தங்கப்பதக்கம் வழங்குவதற்கான விபரப் பட்டியல் பெறப்பட்டு இந்நகராட்சியில் பணிபுரியும் திரு.சிவ.சிதம்பரம், தேவகோட்டை நகராட்சி அவர்களுக்கு தங்கப்பதக்கம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தினை சம்மந்தப்பட்ட நகராட்சிகளில் பெற்றுக் கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி திரு.சிவ.சிதம்பரம், ஒட்டுநர் தேவகோட்டை நகராட்சி என்பவருக்கு தங்கப்பதக்கம் பெறுவதற்கு தமிழ்நாடு கைவினைப்பொருட்கள் மேம்பாட்டுக்கழகம், சென்னை மூலம் ரூ. 29,900/–க்கான தங்கப்பதக்கம் கொள்முதல் செய்யவும் மற்றும் இதர உத்தேச செலவினங்களுக்கும் ரூ.3500/– மொத்தம் ரூ. 33,400/– நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு–</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க. எண்.3320/2021/சி1)**

--

## பொருள் – 267

தேவகோட்டை பேருந்து நிலைய வளாகத்தில் செயல்பட்டு வரும் ஆவின் பாலகம் கடந்த 2018–2019 நவம்பர் முதல் 2020–2021 நவம்பர் வரையிலும் மேலும் நாளது தேதி வரை ஆவின் பாலகத்திற்கு பால் மற்றும் பால் உப பொருட்கள் கடந்த இரண்டு ஆண்டு காலங்களாக மற்றும் நாளது தேதி வரை விற்பனை மேற்கொள்ள வில்லை எனவும், எனவே ஆவின் பாலகத்திற்கு இட வாடகை நிலுவை தொகை செலுத்துவதிலிருந்து விளக்கு அளித்து தொடர்ந்து பாலகத்தில் விற்பனையை மேற்கொள்ளவும் பொது மேலாளர், சிவகங்கை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிமிடெட், கழனி வாசல், காரைக்குடி அவர்களால் கோரப்பட்டுள்ளது. கடந்த செலவின காலத்திற்கு முன்பிருந்தே மேற்படி ஆவின் பாலகம் செயல்படவில்லை. எனவே மேற்படி பாலகத்திற்கான 31.03.2023 வரையிலான நிலுவை கேட்புத்தொகையினை ரத்து செய்யலாம்.

<u>அலுவலகக் குறிப்பு–</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

--

K. Sundaralingam

நகர்மன்ற தலைவர்,
தேவகோட்டை நகர்மன்றம்.

3-4-23.